1970 மார்ச் 10]

யப்படுகிற மிதியடிகளோடு போட்டியிட முடியாத காரணத்தினால் —கையால் செய்யப்படுகிற பொருள்களுக்கு ரிபேட் வழங்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கைத்தறிகளுக்குத்தான் ரிபேட் கொடுத்துவருகிறோம்.

திரு. சி. கோவிந்தராஜன் : தீபாவளி, பொங்கல் சமயத்தில் கதர் துணிகள் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள், சிப்பந்திகளுக்குக் கடனுகை வழங்கப்படுகிறது. அதுபோல கைத்தறித் துணிகள் வழங்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆண்டு கைத்தறித் துணிக்கும் அந்த வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : கதர் வாரியம் இருப்பதுபோல் கைத்தறி வாரியம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசுக்குச் சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத் தனி வாரியம் தேவையில்லை. இப்போதே மாநில சங்கம் இருக்கிறது. ஹான்ட் லூம்ஸ் டைரெக்டர் இருக்கிறார். இரண்டும் சேர்ந்து உதவி புரிகிறது.

திரு. எம். எஸ். மணி : மில்லில் நூற்கப்பட்ட நூலை தறியில் நெய்வது கைத்தறி. நூலையும் கையினாலேயே நூற்றுக்கொண்டு தறியில் நெய்வது கதர். அதைவிட இதற்கு அதிக கை உழைப்பு இருக்கிறதினால் இன்னும் அதிக உதவி அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் சுதருக்கு வாதாடுகிறார்கள்.

Clay Toys Unit at Perambur

* 300 *Q.*—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Government Glazed Clay Toys Unit is functioning at Perambur, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இப்பிரிவு 1961 முதல் செயல்பட்டு வருகிறது. அழகு வேலைப்பாடமைந்த மண்பாண்டத் தயாரிப்புக் கலையில் நாட்டமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அது பயிற்சி அளிக்கிறது. ஆண்டுதோறும் 10 மாணவர்கள் இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 40 உதவிப் பணம் வழங்கப்படுகிறது. அழகு வேலைப் பாடமைந்த மட்பாண்டத் தொழிலிலும், அன்றாடப் பயனுக்கான மட்பாண்டத் தொழிலிலும் புதிய வடிவமைப்பு மாதிரிகளைத் தயாரிக்கும் பணியும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

திரு. கே. சகாதேவக் கண்டர் : தலைவர் அவர்களே, இந்த களி மண்ணால் பொம்மைகள் செய்யப்படுகின்றன. இன்னும் சில இடங்களில் இப்படிப்பட்ட மண் இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப் பட்ட இடங்களிலும் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அரசு ஆவனசெய்ய முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் அமைத்திருப்பது டிரெயினிங்-கம்-புரடக்ஷன் சென்டர். இதிலே பயிற்சி கொடுக்கப் படுகிறது. வேறு எங்காவது தொடங்கலாம் என்று யாராவது முன் வந்தால் அவர்களுக்கு உதவி செய்யலாம்.

மாமல்லபுரம் அரசினர் சிற்பக்கலைப் பயிற்சிப் பிரிவு

*301 வினா—திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மாமல்லபுரத்திலுள்ள அரசினர் சிற்பக்கலைப் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாத உதவித் தொகையை ரூ. 60-5-75 என்ற விகிதத்திற்கு உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இப்பள்ளியில் படித்துத் தேறுகின்றவர்களுக்கு தேவஸ் தானங்களில் சிற்பிகளாக பணிபுரியும் வேலைவாய்ப்புக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(உ) செங்கல் கலைக் கட்டடத்துறையிலும், சுதையிலிருந்து பிம்பங்கள் செய்யும் துறையிலும் இம்மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மாத உதவித் தொகையை ரூ. 60 ஆக எல்லா மாணவர்களுக்கும் உயர்த்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

(இ) ஆம்.

(உ) ஆம்.

வேலூர் தாலுக்கா, சதுப்பேரி குளத்திற்கு வரும் கால்வாயைத் தூர் எடுத்தல்

*302 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு, வேலூர் தாலுக்காவில் இருக்கும் சதுப் பேரிக்கு மழைக் காலத்தில் பாலாற்று நீரைக் கொண்டு வரும் கால் வாயை மராமத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?